அருளோசை

திருவள்ளுவ[ர்]
ஆண்டு 200[5]
சித்திரை
1974 ஏப்ரல்

சமய பாட போதனைத் திங்களிதழ்

Acc No. 38030



இந்திர னுள்ளிட்ட தேவர்குழாமெல்லாம்,
வந்திருந் தென்னை மகட்பேசி மந்திரித்து,
மந்திரக் கோடி யுடுத்தி மணமாலை.
அந்தரி சூட்டக் கனுக்கண்டேன் தோழீநான்.

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
சென்னை-600018

௨

தவிக்கின்றேன்

"பரம்"

இறைவா நின் சந்நிதிக்கு வந்தேன் ஆங்கே
ஏறெடுத்துன் பேரழகைப் பார்த்தேனில்லை!
இருகாத தூரம்வந் திருந்து கொண்டே
எவ்வடிவை நீஎன்றே ஏங்குகின்றேன்!

திருமுறைகள் விண்மோதி இசைத்த, ஆங்கே
தேவா, உன் திருப்புகழைக் கேட்டேனில்லை!
தெருச்சந்தைக் கூச்சலில்நின் பெருமை கேட்கத்
தேடியலை கின்றேன் நான் திகைக்கின்றேனே!

விண்முட்டும் கோபுரத்தின் வாயில் வந்தேன்
வீணன்என் தலைஆங்கே வணங்க வில்லை!
மண்பட்டுக் கிடக்கும்ஒரு செப்புக் காசை
மாத்திரம்வா ரியெடுக்கக் குனிகின்றேனே!

பூக்காட்டுப் புனலோடைக் கரைக்கு வந்தேன்
புரியாதேன் நீராட இறங்கவில்லை!
சாக்கடைநீர்த் தேக்கத்தில் பாய்ந்த மூக்கு
தனைப்போக்கக் குடைந்தாடித் தவிக்கின்றேனே.

அருளோசை

திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 2	ஆனந்த சித்திரை 1974 ஏப்ரல்	ஓசை 10

அருளோசை அன்பர்களுக்கு, வணக்கம்.

சித்திரைப் புத்தாண்டு 'ஆனந்த்'மாகப் பிறந்திருக்கிறது. அருளோசை அன்பர்கள், விளம்பரதாரர்கள், ஆதரவாளர்கள், கட்டுரையாளர்கள் அனைவருக்கும் "அருளோசை"யின் நல்வாழ்த்துக்களை உரிமையாக்குகிறோம்.

வினாவிடைப் பகுதியில் பல அன்பர்கள் உற்சாகத்துடன் பங்கேற்றுள்ளனர். இந்த ஆர்வம் நல்லமுறையில் வளரும் என்று நம்புகிறோம். பரிசு பெற்றவர்கள் தவிர பல அன்பர்கள் குறிப்பிடத்தக்க முறையில் விடை எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கு நமது பாராட்டுக்கள்.

அன்பு மிகக் கொண்டு தாங்கள் கடிதம் எழுதும்போது தவறாமல் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதவேண்டும். தவிர சந்தாவைப் புதுப்பிக்கும் அன்பர்களில் பலர் "சந்தா புதுப்பித்தல்" என்று குறிப்பிடுவதோடு தவறாமல் தங்கள் சந்தா எண்ணையும் குறிப்பிட வேண்டும். அவ்வாறு குறிப்பிடாமல் தங்கள் சந்தாவைப் புதுப்பித்தால் ஒருவருக்கே இரு பிரதிகள் வர ஏதுவாகும்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்

இந்த இதழில்

அறங்காவலர் நியமனம் பற்றி அடிகளார் கருத்து

"..................திருக்கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமிப்பதில் நம்முடைய அரசு போதிய கவனம் எடுத்துக்கொள்கிறது என்று நாம் கவனத்தில் எடுத்துக்கொண்டாலும் திருக்கோயில் வழிபாட்டு முறையில் நம்பிக்கை இல்லாதவர்கள் நிர்வாகத்தில் நியமிக்கப் படுகின்றார்கள் என்று பரவலாக இருக்கின்ற புகார்களை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். ஒருசமயம் இந்த அவையில் ஏற்பட்ட வினா-விடையில் கூட, "கோயில் வேறு, நிர்வாகம் வேறு" என்று நம்முடைய அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். உணர்வு பூர்வமான ஒரு தத்துவத்தில், ஒரு கொள்கையில் நம்பிக்கையுடையவர் கள்தான் ஒரு நிர்வாகத்தையும் சிறப்பாகச் செய்ய முடியும். நிர்வாகமும் உணர்வும் பிரிக்கப்படுமானால், என்ன இருந்தாலும், அந்த நிர்வாகம் தளர்ச்சி அடையும். எனவே, இந்தச் சட்டத்தை அமுல்படுத்துகின்ற போது கூடுமான வரையில், கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாக, அது மட்டுமல்ல, திருவுருவத்தில், திருக்கோயில் வழிபாட்டுமுறையில் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கவேண்டும். அப்படி உள்ளவர் களுடைய மனம் புண்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய மிகுந்த பொறுப்பு அரசுக்கு உள்ளது. அது கடமையுமாகும். சாதாரண அரசுப் பணியாளர்களை நியமிக்கக்கூட-எழுத்தர்களை நியமிக்கக் கூட ஒரு பொதுக்குழு அமைத்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பல கோயில் களின் நிர்வாகத்தைக் கவனிக்க அறங்காவலர்களை நியமிக்கும்போது, அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, ஒரு குழு நியமித்து, மாநில அளவில் ஒரு குழு அமைத்து, விண்ணப்பங்கள் வரவழைத்து, பரிசீலித்து எடுப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிச் செய்வ தால் வேண்டுமென்றே செய்யப்படுகின்றது என்று குறை கூறக்கூடிய வாய்ப்பைத் தடுத்தது போல் ஆகும். நான் ஏதோ குறைகள் இருக் கிறது என்பதாலே தான் சொல்கிறேன் என்று கருதாமல், தவறுகள் நடைபெறுமல் தடுப்பதற்கான முயற்சியில் இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டும் என்று சொல்கிறேன். ஒரு மாநில அளவில் கடைநிலை ஊழியரைத் தேர்ந்தெடுப்பதற்குக்கூட, ஒரு எழுத்தரைத் தேர்ந்தெடுப்பதற்குக்கூட ஒரு பொதுக்குழு இருக்கிறது. சமயச் சார் பற்ற அரசு நடைபெறுகின்ற இடத்தில் சமய நிறுவனங்கள், திருக் கோயில்கள் நிர்வாகம் செய்யப்படுவதற்கு அறங்காவலர்களைத் தேர்ந் தெடுப்பதற்கு ஒரு அறக்குழு அமைத்து தேர்ந்தெடுத்தால் எந்த விதமான புகார்க்கும் இடமில்லாத அளவுக்குச் செய்ய முடியும் என்பதைத் தலைவர் அவர்கள் மூலமாக அரசுக்கு எடுத்துச் சொல்லி அந்த வகையில் அரசு அக்கறையும், கவனமும் செலுத்த வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.........."

(4-12-73-இல் சட்ட மன்ற மேலவைப் பேச்சு)



சிந்தனை

தவத்திரு. குன்றக்குடி அடிகளார்

சிந்தனை, மனத்தின் தொழில். மனம் ஒன்றைப் பற்றிநின்று அதனையே திரும்பத் திரும்ப எண்ணுதல் சிந்தனையாகும். அதனையே என்றால் ஒரே மாதிரியல்ல. ஏன்? எதனால்? எப்படி? என்ற வினாக்களை எழுப்பி அந்த வினாக்களுக்கு விடைகாண்பதே சிந்தனைப்பயிற்சி. இன்று சிந்தனை என்பது எளிய சொல். சிந்தனை என்ற சொல்லுக்கு உரிய முழுநிறைப் பொருள் பலருக்குப் புரிவதில்லை. வரலாற்றுச் சுவட்டில் கலந்து வந்துள்ள தீமைகளைத் தொகுத்துக் கூறுவதைக் கூடச் சிலர் சிந்தனை என்கின்றனர். சிந்தனை என்பது குறையும் நிறையும் அறிந்து அளப்பது; குறையை மறப்பது; நிறையைப் போற்றுவது. நிறையைப் போற்றத் தெரியாத இடத்தில் குறை நீங்காது. அதுபோல் குறை மறக்கப் பெறாத இடத்தில் நிறை தோன்றாது. உலகியல் குறையும் நிறையும் கலந்ததே. குறையை நிறைவாக்குதே சிந்தனை. சிந்தனை என்பது வைரத்துக்குள் ஒளிந்து கிடக்கும் ஒளியைக் கடைந்து வெளிக் கொணர்வதைப்போல உயிரிடத்தில் ஒளிந்து கிடக்கும் அறிவாற்றல் திறனை வெளிப்படுத்துவது. இதற்குச் சுயசிந்தனை என்று பெயர். முன்னேயே தோன்றியுள்ள ஒரு கருத்தைத் தொடர்ந்து சிந்தனை தோன்றி அக்கருத்திற்குரிய முழுநிறைப் பொருளை வெளிப்படுத்துவது சுயசிந்தனை.

சிந்தனை வளர்ச்சியின்பாற்பட்டதாக, நிறையினைச் சார்ந்ததாக வளரும்பொழுது, மனித உலகத்திற்குப் புதிய செய்திகள் கிடைக்கின்றன. மனித சமுதாயம் அறிவில், கருத்தில், உணர்வில் முதுமையடைந்து எய்த்துப் போகாமல் ஓயாது உயிர்ப்பளித்துக் கொண்டிருப்பது சிந்தனையேயாகும். ஊற்றுவளம் நின்றாலும் ஆற்றின் நீரோட்டம் தடைப்பட்டாலும் குட்டைகள் தோன்றும். அதுபோல், சிந்தனையற்ற சமுதாயம் தேக்கநிலை அடைந்துவிடும்.

சங்ககாலத்திலும், காப்பியக் காலத்திலும் தமிழ்ச் சமுதாயத்தில் சிந்தனைத் துடிப்பு இருந்திருக்கிறது. தேவாரக் காலத்திலும் கூடச் சிந்தனைத் துடிப்பு இருந்திருக்கிறது. ஆனால், அச்சிந்தனைக்கு எதிர் சக்திகளாக இருந்தவர்கள் அதாவது, சிந்தனை செய்ய மறுத்தவர்கள் அந்தச் சிந்தனையின் ஆற்றலைச் சிதைத்து விட்டனர். வெளிப்படையாகச் சிதைத்தால் மக்கள் எதிர்ப்பு ஏற்படும் என்று அஞ்சி அச் சிந்தனைக்குச் செயலுருவம் கொடுப்பதற்குப் பதிலாக அப்பட்டமான வழிபாட்டுருவம் கொடுத்து விட்டனர்.

ஆக, சிந்தனை செய்து பழகுக. கண்ணுற் காணப்படுகின்ற காட்சியை ஒட்டிச் சிந்தனையைத் தொழிற்படுத்துக. படிக்கும் நூற் கருத்துக்களை விரிவாக்கும் வகையில் சிந்தனையை இயக்குக. செவிகளால் கேட்கும் செய்திகளை உணர்ச்சி கலக்காமல் முதலில் சிந்தனைப் பட்டறைக்கு அனுப்பித் தூய்மை செய்து அறிவாக்குக. மனிதனுக்குள்ள ஒரே ஒரு சிறந்த இயல்பு சிந்தனைதான். சிந்திக்கத் தெரியாதவன் முழுமனிதனாதல் அரிது.

"அருளோசை"

வினா விடைப் பகுதி-மார்ச்சு-74

பரிசு பெற்றவர்கள்

முதல் பரிசு:	செல்வி கே. கலைச்செல்வி, கடலூர்-2, சந்தா எண். 1993.
இரண்டாம் பரிசு:	திரு. ஜி. பஷீர் அகமத், பி.ஏ.பி.டி. சேலம்-2, சந்தா எண். 2541.
மூன்றும் பரிசு:	செல்வி. வி. டி. அருணகுமாரி, வேலூர்-6, சந்தா எண். 2816.
நான்காம் பரிசு:	1. செல்வன், கோ. இராமமூர்த்தி, பட்டீசுவரம், சந்தா எண். 2882.
	2. செல்வன். S. முருகேசன். பணிக்கன் குடியிருப்பு சந்தா எண். 518.
	3. செல்வி. R. சாவித்திரி, பட்டீசுவரம்.

திருமாலடியார்

இராமானுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், பி.ஏ., பி.ஓ.எல்.

(9)

இராமானுசர் திருவாய்மொழி கற்றது

ஆளவந்தாருடைய சீடர்களிலே திருமாலையாண்டான் என்பவர் திருவாய்மொழியின் அரும்பொருள்களையெல்லாம் நன்கு உணர்ந்தவராக விளங்கினார். திருக்கோட்டியூர் நம்பியின் கட்டளைக் கிணங்கத் திருவரங்கத்தில் இராமானுசர் திருமாலையாண்டானிடம் திருவாய்மொழி பாடம் கேட்டார். அந்தமிழ் இன்பப் பாக்களுக்குப் பலவிடங்களில் ஆண்டான் கூறிய உரை இராமானுசருக்கு ஏற்கவில்லை. ஆதலால் இடையிடையே இராமானுசர் பல வினாக்களை யெழுப்பினார். சில வேளைகளில் 'ஆளவந்தார் இப்படி உரை கூறியிருக்க மாட்டாரே' என்றும் கேட்டார். இவ்விதம் பாடம் சொல்லும்பொழுது அடிக்கடி தொல்லை கொடுப்பது திருமாலையாண்டானுக்குப் பிடிக்கவில்லை. பாடத்தை நிறுத்திவிட்டார். “நீர் குருவுக்கு விஞ்சிய சீடராயிருப்பதாலே உமக்குப் பாடம் சொல்ல மாட்டோம்” என்று கடிந்துரைத்தார். இந்தச் செய்தி திருக்கோட்டியூர் நம்பிக்குத் தெரிந்தது. அவர் உடனே திருவரங்கத்துக்கு விரைந்து வந்தார். திருவாய்மொழி பாடம் நின்றதற்குரிய காரணத்தைக் கேட்டறிந்தார். “இராமானுசர் அடிக்கடி எழுப்பும் வினாக்களும், சில பாசுரங்களுக்கு அவர் கூறின விளக்கங்களும் முன்பு நாம் ஆளவந்தாரிடம் கேட்டவையே. ஆதலால் இராமானுசரைப் பேரறிஞராகக் கருதி உமக்குத் தெரிந்த பொருள்களை அவரோடு கலந்து பேசிப் பரிமாற்றம் செய்து கொள்வதே சிறந்ததாகும்” என்று கூறிச் சமாதானம் செய்தார். பின்பு திருமாலையாண்டானும் இராமானுசருடைய கூர்த்த அறிவைப் பாராட்டி ஒருவாறு திருவாய்மொழிப் பொருளைச் சொல்லி முடித்தார்.

இவ்விதம் திருவாய்மொழியின் அரும்பொருள்களை யெல்லாம் கேட்ட பின்பு அத் திருவாய்மொழிப் பாடல்களை நல்லிசையில் அமைத்துப் பாட விரும்பினார். அதற்காகத் திருவரங்கப்பெருமாள் அரையரை அடைந்து இசைக்கலையைப் பயின்றார். இப்படி ஆளவந்தாரின் சீடர்களை யெல்லாம் அணுகிப் பல கலைகளைப் பயின்றார். ஆளவந்தார் காலத்தில் அவரைச் சரணடைந்தவர்களிலே எல்லாக் கலைகளையும் ஒருவரே அறிந்து கொள்ளுமளவுக்கு யாரும் உயர்ந்திருக்கவில்லை. பின்பு

இராமாநுசர் ஒருவரே பல கலையும் பயின்று பல்கலைக் கழகமாகத் திகழ்ந் தார். ஆளவந்தாருடைய நோக்கத்தை நிறைவேற்றுவதே தமது பணி என்று முழக்கமிட்டார்.

இராமாநுசர் பல்கலைச் செல்வராகத் திருவரங்கத்தில் செங்கோல் செலுத்திக்கொண்டிருக்கும் பொழுது வடநாட்டிலிருந்து மாயாவாதி யொருவர் தென்னாட்டுக்கு வந்தார். 'யக்கிய மூர்த்தி' என்கிற அவர் அத்துவிதத் துறவியாவார். அவருக்குப் பல மாணாக்கர் இருந்தனர். கங்கைக் கரையிலிருந்த பல வித்துவான்களை வாதில் வென்று பெருமை பெற்றிருந்தார். திருவரங்கத்தில் பேரறிஞராய் விளங்கிவரும் இராமா நுசரைப் பற்றிக் கேள்வியுற்றார். அவரோடு வாதம் செய்து வெற்றி பெற விழைந்தார். உடனே திருவரங்கத்திற்கு வந்து தமது கருத்தை இராமாநுசருக்குத் தம் சீடர்களின் வழியாகச் சொல்லியனுப்பினார். இராமாநுசரும் மாயாவாதங்களைக் கண்டித்துத் தம்முடைய விசிட் டாத்துவித வேதாந்தக் கொள்கைகளை நிலைநாட்ட இதுவே ஏற்ற தருணம் என்று அகமகிழ்ந்தார். சொற்போருக்கு இசைந்து நாளும் குறிப்பிட்டார்.

வாதப் போர் :

மாயாவாதியுடன் இராமாநுசர் சொற்போரைத் தொடங்கினார். தத்துவ நூல்களை நன்கு உணர்ந்த அந்தப் பேரவையில் அவ்விருவரும் ஒப்பற்ற மதக்களிறுகள். ஒன்றோடு ஒன்று வெற்றி தோல்வியின்றிப் போரிடுதல் போல் வாதப்போர் நிகழ்த்தினர். இருவரும் தங்கள் தங்களுடைய வாதங்களே சிறந்தன என்று முழக்கினர். இவ்வாதப்போர் பதினாறு நாட்கள் நடந்தன. பதினேழாம் நாள் மாயாவாதியின் வாதமே வெற்றி பெற்றுவிடும் என்ற சூழ்நிலை உருவாகியது. இராமா நுசர் தளர்ந்து விட்டார். இந்நிலையில் மாலை வேளை வந்துற்றதால் மறு நாள் தொடர்ந்து வாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வாடிய முகத்தோடு தம்முடைய மடத்திற்கு வந்த இராமாநுசர் தாம் தினமும் பூசைசெய்து வரும் பேரருளாளராகிற வரதராசப்பெருமாளை வணங்கினார். "பேரருளாளரே! ஆழ்வார் காலம் தொடங்கி ஆளவந் தார் காலம் வரை இவ்வுலக இருளைப் போக்கி, ஞான ஒளியை விளக்கி வந்த இந்தத் தரிசனம் என்னால் இன்று அழியலாமா? அதற்கு நான் காரணமாக வேண்டுமா? அடியேனைக் கடைக்கணித்த ஆளவந் தாருடைய நோக்கம் பழுதடையலாமா? பேரருளாளர் என்கிற உம்முடைய திருப்பெயருக்குப் பொருந்துமா?" என்று இவ்விதம் பலவாறு கூறிப் புலம்பினார். அன்றிரவு உணவு உட்கொள்ளாமல் இறைவன் திருப்பெயரையே தியானித்துத் துயில் கொண்டார்.

அருட்கடலான அப்பனும் அன்றிரவு அவர் கனவிலே தோன்றி, "அன்பரே நீரே நாளை வாதத்தில் வெற்றி வெறுவீர். அஞ்சவேண்டாம்" என்று அபயமளித்து அப்புலவரை வெல்லுதற்குரிய அரும் பொருள்களை யும் கூறி மறைந்தருளினன்.

இராமாநுசரும் மறுநாட்காலையில் புதியநம்பிக்கையோடு புறப்பட்டார். ஆளவந்தாரின் அருள் நம்மை வாழ்வளிக்கும் என்று நம்பினர். அருளாளனுடைய ஆணைச்சொற்களையும் அருளிச்செய்தார். முன்பு ஆளவந்தார் அருளிச்செய்த 'மாயாவாத கண்டனம்' என்ற நூலிலிருந்து பல செய்திகளைத் தம் உள்ளத்தில் தேக்கிக் கொண்டார். அகமும் முகமும் மலர சொற்போர் நிகழும் மண்டபத்தை அடைந்தார்.

'எப்படியும் நமக்கே வெற்றி' என்று இறுமாந்திருந்த மாயாவாதி யான யக்ய மூர்த்தி, இராமாநுசரின் முகப்பொலிவையும், மிடுக்கான நடையையும் நோக்கினர். 'நேற்று மாலை முகம்வாடித் தளர்ந்து போன இராமாநுசருக்கு இன்று இந்தப் பொலிவு எப்படி வந்தது?' என்று திகைத்தார். நா குழறலாயிற்று. 'இனி இவருடன் வாதிட்டு வெல்ல முடியாது' என்ற முடிவுக்கு வந்தார். கடந்த பதினேழு நாட்களிலும் நாம் கோபதாபத்தோடு பேசிய பொழுதெல்லாம் இவர் அமைதியாகவே இருந்து பதிலுரைத்த திறத்தையெல்லாம் எண்ணி வியந்தார். 'இனி இவரை நாமே சரணடைந்து உண்மையாக அறியவேண்டிய வேதாந்தப் பொருள்களையெல்லாம் அறிவோம்" என்று எண்ணியவராய் எவரும் எதிர்பாராத வகையில் இராமாநுசரின் திருவடியில் "நான் தோற்றேன்" என்று சொல்லிக்கொண்டே தண்டனிட்டார். அதுவரை கண்மூடித் தியானத்தில் அமர்ந்திருந்த இராமாநுசர் அவரை வாரி அணைத்து' "அறிஞரே நீர் தோற்கவில்லை, உம்மிடமிருந்த நான் என்ற ஆணவமே தோற்றது" என்று சொன்னர்.

யக்ய மூர்த்தியும் இராமாநுசரையே குருவாக ஏற்றுக்கொண்டார். 'என் கல்விச் செருக்கே என்னைக் கெடுத்து விட்டது' என்று பணிவோடு கூறினர். கருணைக் கடலான இராமாநுசரும் பேரருளாளப் பெருமா ளால் கிடைத்த வெற்றி என்ற நன்றிப்பெருக்கால் அவருக்கு அருளாளப் பெருமாள் எம்பெருமானர் என்ற திருப்பெயரை வழங்கியதோடு முக்கோலையும் முப்புரிநூலையும் அளித்தார். திருமண் காப்பினையும் சங்கு சக்கரப் பொறியாகிய திருவிலச்சினையும் அருளினர். அதோடு அவர் தங்குவதற்குரிய மடம் ஒன்றையும் அமைத்துக் கொடுத்தார்.

இராமாநுசருக்கு அருளாளப் பெருமாளிடம் மிகவும் அன்புண்டு. சிறந்த அறிவாற்றல் உடையவர் என்ற மதிப்பும் உண்டு. அதற்கேற்ப நல்ல பல நூல்களையும் இவர் இயற்ற வேண்டுமென்று கருதினர். எவ்வளவு வடமொழிப் புலமை இருந்தாலும் ஆழ்வார்களின் ஈரச் சொல்லாகிற திவ்வியப்பிரபந்தங்களில் ஈடுபாடு இல்லையானல் எதுவும் பிரகாசிக்காது என்ற கொள்கையுடையவராகையாலே அருளாளப் பெருமாள் எம்பெருமானருக்கு நாலாயிர திவ்வியப் பிரபந்தங்களையும் உரைவிசேடங்களையும் கற்பித்தார்.

இராமாநுசருடைய தொண்டர் குழுவில் மிகவும் சிறந்து விளங்கிய கூரத்தாழ்வான், முதலியாண்டான் ஆகியவர்களுக்கு அடுத்த நிலையில் அருளாளப்பெருமாள் எம்பெருமானரும் சிறந்து விளங்கினர். அப்போது பல சான்றோர்கள் இராமாநுசரைச் சரணடைந்து தங்கள்

குருவாக ஏற்றுக் கொண்டார்கள். இப்படிச் சீடர்களுடன் சிறந்து விளங்கும் இராமாநுசரின் பெருமைகளைக் கேள்வியுற்ற அனந்தாழ்வான், எச்சான், தொண்டனூர்நம்பி, மருதூர்நம்பி என்ற நான்கு பேரும் இராமாநுசர் திருவடிகளை அடைந்து, "அடியேங்களை ஆட்கொண்டு அருளவேண்டும்" என்று வேண்டினர். உடனே இராமாநுசர் அவர்களை நோக்கி "நீங்கள் அருளாளப்பெருமாள் எம்பெருமானார் திருவடிகளை அடைந்து அரும் பொருள்களைப் பெறுவீர்களாக" என்று வாழ்த்தியருளினார். அவர்களும் அவ்வாறே அவர் திருவடிகளை அடைந்து உய்ந்து போயினர்.

அனந்தாழ்வான் தொண்டு:

இராமாநுசர் திருவரங்கத்தில் 'அமர்சுவை ஆயிரமான' திருவாய்மொழிக்கு எல்லோரும் கேட்டு உய்யும்வண்ணம் பொருள் கூறிவந்தார். அங்ஙனம் பொருள் கூறிவரும் காலத்தில் ஒருநாள்,

"ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி
வழுவிலா வடிமை செய்யவேண்டு நாம்
தெழிகுர லருவித் திருவேங் கடத்து
எழில்கொள் சோதிஎந்தை தந்தை தந்தைக்கே.

[திருவாய்மொழி 3-ம் பத்து]

என்ற திருவாய் மொழிக்கு மிகவும் உருக்கமாகப் பொருள் கூறிவந்தார். இந்தத் திருவாய்மொழியின் இரண்டாவது பாசுரத்தில் "சிந்து பூ மகிழும் திருவேங்கடம்" என்ற சொற்றொடர் வருகிறது. இந்த இடத்தில் உரை விளக்கம் செய்கின்றபோது இராமாநுசருக்குத் திருவேங்கடம் என்னும் திருப்பதி மலையின்மேல் எழுந்தருளியிருக்கும் திருமாலுக்கு உகப்பாகத் திருமாலை கட்டிச் சாத்தும் தொண்டை மேற்கொள்பவர் நம்மிடம் யாரேனும் உளரோ என்று கேட்கத் தோன்றியது. அப்படியே திருநந்தனவனம் வைத்து திருமாலை சாத்தும் தொண்டில் ஈடுபாடுள்ளவரை அறியவிரும்பினார். அந்தச் சமயத்தில் மிகவும் குளிர் அதிகமாகவுடைய மலையிலே தங்கி அத்தொண்டினைச் செய்யச் சீடர்களிலே பலர் தயங்கினர். அனந்தாழ்வான் என்கிற சீடர் மட்டும் விரைவாக எழுந்து இராமாநுசரைத் தண்டனிட்டு, "தாங்கள் பணிப்பீர்களேயானால் இப்பொழுதே யான் அத்தொண்டினைச் செய்யப் புறப்படுகிறேன்" என்று தயங்காமல் கூறினார். இராமாநுசர் அவருடைய தொண்டுள்ளத்தைப் பாராட்டி "இவர்களிலே நீரே ஆண் பிள்ளையாவீர். இனி அனந்தாழ்வானாகிற நீர் அனந்தாண்பிள்ளை யென்றே அழைக்கப் பெறுவீர்" என்று வாழ்த்தி விடை கொடுத்தனுப்பினார்.

அனந்தாழ்வானாகிற அந்த ஆண்பிள்ளையும் திருவேங்கடத்திற்குச் சென்று 'இராமாநுசர்' என்ற பெயரிலே திரு நந்தனவனம் அமைத்து, 'செண்பக மல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சி' என்ற வகையில் பண்பகர் பூக்களையும் உற்பத்தி செய்து அவைகளை மாலையாகத் தொடுத்துத் திருவேங்கடமுடையானுக்குச் சாத்திவருவாராயினர்.

(தொடரும்)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் புராணம்

கொற்றவன்குடி உமாபதிசிவம் அருளிச்செய்த மூலமும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவண்ணுமலை ஆதீனம் ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் அருளிய பதவுரையும்

பிரதி செய்தவர் : சேக்கிழார்தாசன் இராமசேஷன்

ஆயுமறை மொழிநம்பி யாண்டார்நம்பி
யருள்செய்த கலித்துறையந் தாதிதன்னைச்
சேயதிரு முறைகண்ட ராசராச
தேவர்சிவா லயதேவர் முதலாயுள்ள
ஏயகருங் கடல்புடைசூ ழுலகமெல்லா
மெடுத்தினிது பாராட்டிற் றென்னவந்தத்
தூயகதை யடைவுபடச் சொல்வீரென்று
சோழனுரை செயக்கேட்டுக் குன்றைவேந்தர். 24

(இ-ள்): மறைமொழியாயு நம்பியாண்டார்நம்பி—வேதமொழியை யுணர்ந்த நம்பியாண்டார் நம்பி; அருள் செய்த கலித்துறை யந்தாதி தன்னை—அருளிச்செய்த கலித்துறைத் திருவந்தாதியை; சேயதிருமுறை கண்ட ராசராசதேவர்—செவ்விய திருமுறைகண்ட சோழராகிய அபயகுல சேகரனும்; சிவாலயதேவர் முதலாயுள்ள—சிவாலய தேவர் ஆதியாயுள்ள; ஏயகருங்கடல் புடைசூழலகமெல்லாம்—பொருந்திய கடலாற் சூழப்பட்ட உலகத்தின்கணுள்ள அறிஞர் தொகுதி முழுதும்; எடுத்தினிது பாராட்டிற்றென்ன—போற்றி யன்புடன் பாராட்டிக் கொண்டு வந்ததென்று சொல்ல; அந்தத் தூயகதை யடைவுபடச் சொல்வீரென்று—அந்தத் தெய்வத் தன்மையுள்ள சரித்திரத்தை முறையாகச் சொல்லவேண்டுமென்று; சோழனுரைசெயக் கேட்டுக் குன்றை வேந்தர்—அநபாய சோழன் சொல்ல அதனைக் கேட்டுச் சேக்கிழார் நாயனர். (எ.று).

ஈண்டு உலகமென்றது ஆகுபெயராய் அறிஞர் தொகுதியை உணர்த்தி நின்றது. ஆதலில் உலகம் பசித்ததென்றாற்போல அஃறிணை முடி பேற்றது.

தில்லைவா ழந்தணரே முதற்பண் பாடு
திருநீல கண்டத்துப் பாணரீருச்
சொல்லியதொண் டத்தொகைநூல் வகையந்தாதித்
தொடர்ச்சியினை விரித்துரைக்க வளவன்கேட்டு
மெல்லியலாள் பங்கர்திரு வருளைநோக்கி
வியந்தடிமைத் தொண்டுசெய்து பேறுபெற்ற
செல்கதியை நினைந்துருகி வளவர்கோமான்
சேவையர்கா வலரைமுக நோக்கிச் சொல்வான் 25

(இ-ள்) : தில்லைவாழந்தணர்முதல்-தில்லைவாழந்தணர் முதலாக; பண் பாடு திருநீலகண்டத்துப் பாணரீருச் சொல்லிய-யாழிற்பண்களைப் பாடுகின்ற திருநீலகண்ட யாழ்பாணரீருகக் கூறிய; தொண்டத் தொகை நூல்வகை-திருத்தொண்டத்தொகைப் பதிகத்திற்கு வகை நூலாகிய; அந்தாதித் தொடர்ச்சியினை-நம்பியாண்டார் நம்பி திருவந் தாதித்தொடர்பினை; விரித்துரைக்க வளவன்கேட்டு-விரிவாயெடுத்துச் சொல்ல அதனை அநபாய சோழன் கேட்டு; மெல்லியலாள் பங்கர் திருவருளை நோக்கி வியந்து-உமாதேவிபாகராகிய சிவபிரானது திரு வருளை நோக்கி அதிசயித்து; அடிமைத் தொண்டு செய்து பேறு பெற்ற-அடிமைத் தொண்டினைச் செய்து சிவபோகப் பேற்றினை யடைந்த; செல்கதியை நினைந்துருகி-செல்லத்தக்க முத்தி நெறியை நினைந்து மனமுருகி; வளவர் கோமான் சேவையர் காவலரை முக நோக்கிச் சொல்வான்-அநபாயசோழன் சேக்கிழார் நாயனர் திருமுகத்தைப் பார்த்துக் கூறுகின்ருன். (எ-று).

ஏ-அசை. இவ்விரண்டுங் குளகம்.

செல்கதி என்றது அறிஞர்கள் செல்லுதற்குரிய சிறப்புடைத்தென்பது குறித்து நின்றது. சேவூர் என்றது சேவையென மரீஇயவாறு. சேவூர்க்கிழார் என்னும் உடைப்பெயரும் சேக்கிழார் என மரீஇ நின்ற தென்க.

அவரவர்க ளுடர்வர்க ளிருந்தவூர்வந்
தவதரித்த திருமரபு திருப்பேர் செய்த
சிவசமயத் திருத்தொண்டு முற்பிற்பாடு
சிவனடிக்கீ ழுயர்பரம முத்திபெற்ருேர்
எவருமறி யச்சீவன் முத்தராயிங்
கிருப்பவர்க ளினிமேலும் பிறப்போர் மண்மேல்
அவர்களைச் சேர்ந் தருள்பெற்ருேர் பகைத்துப்பெற்ரு
ரவர்கள் பகையாய் நரகி லடைந்த பேர்கள். 26

(இ-ள்) : அவரவர்களுடைவர்களிருந்தவூர்-அந்தந்த அடியார்கள் அவ தரித்த நாடுகளும் அவர்களிருந்த ஊர்களும்; வந்தவதரித்த திருமரபு திருப்பேர்-அவர்கள் வந்துதித்த திருமரபுகளும் திருநாமங்களும்; செய்த சிவசமயத் திருத்தொண்டு-சைவசமயத்தில் செய்து கொண் டிருந்த திருத்தொண்டும்; முற்பிற்பாடு சிவனடிக்கீழுயர் பரமுத்தி பெற்ருேர்-திருத்தொண்டத் தொகையருளிச் செய்ததற்கு முற்காலத் திலும் பிற்காலத்திலும் சிவபிரானது திருவடிக்கீழ் சிறந்த பரமுத்தியைப் பெற்றவர்களும்; எவருமறியச் சீவன் முத்தராயிங்கிருப் பவர்கள்-யாவரும் அறியும்படி சீவன் முத்தர்களாயிங்கிருப்பவர்களும்; இனிமேலும் பிறப்போர் மண்மேல்-உலகின்கண் இனிப் பிறப்பவர் களும்; அவர்களைச் சேர்ந்தருள் பெற்ருேர்-அம்முத்திபெற்ற அடியார்களையடைந்து திருவருளைப் பெற்றவர்களும்; பகைத்துப்

பெற்றோர்-அவர்களிடத்துப் பகை கொண்டு கதியடைந்தவர்களும்; அவர்கள் பகையாய் நரகிலடைந்த பேர்கள்-அவர்களுக்குப் பகைவராய் நரகமடைந்தவர்களும். (எ-று).

இல்லறத்தி லிருந்துநனி முத்திபெற்றோ
 ரில்லறத்திற் சிற்றின்ப வியல்பை நீக்கி
நல்லறமாந் துறவறத்தி னின்றுபெற்றோர்
 நற்பிரமசாரிகளா யருள்பெற்றுய்ந்தோர்
செல்கதிசற் குருவருளாற் சென்றுசேர்ந்தோர்
 சிவபூசை செய்துபர முத்திபெற்றோர்
புல்லறிவு தவிர்ந்துதிரு வேடமேமெய்ப்
 பொருளெனக்கொண் டரனடிக்கீழ்ப் பொருந்தப்புக்கோர். (27)

(இ-ள்): இல்லறத்திலிருந்து நனிமுத்தி பெற்றோர்-இல்லற நெறிக்கண் நின்று மிக்குயர்ந்த முத்தியை அடைந்தவர்களும்; இல்லறத்திற் சிற்றின்ப வியல்பை நீக்கி-இல்லறத்தின்கணிருந்து அனுபவிக்கும் சிற்றின்ப வாழ்வை நீக்கி; நல்லறமாந் துறவறத்தினின்று பெற்றோர்-நல்ல அறமாகிய துறவறத்திலிருந்து முத்தியடைந்தவர்களும்; நற்பிரமசாரிகளா யருள்பெற்றுய்ந்தோர்- நல்ல பிரமசாரிகளாகவே யிருந்து அருள்பெற்றுக் கரையேறினவர்களும்; செல்கதி சற்குருவருளாற் சென்று சேர்ந்தோர்-தாம் அடையத்தக்க முத்திநெறியை ஞானசாரியரது திருவருளாலடைந்து பெற்றவர்களும்; சிவபூசை செய்து பரமுத்தி பெற்றோர்-சிவபூசையைச் செய்து பரமுத்தியடைந்தவர்களும்; புல்லறிவு தவிர்ந்து திருவேடமே மெய்ப்பொருள் எனக்கொண்டு- அஞ்ஞானம் நீங்கிச் சிவவேடமே உண்மைப் பொருளென மனத்திற் கொண்டு; அரனடிக்கீழ்ப் பொருந்தப்புக்கோர்-சிவனடிக்கீழ்ப் பொருந்தச் சென்றவர்களும். (எ-று).

இப்படியே யடைவுபடப் பிரித்துக்கேட்டால்
 யாவருக்கு மேதரிக்கச் செவிநா நீட்ட
வொப்பரிய பொருடெரிந்து விளங்கித்தோன்ற
 வுவமையுடைத்தாயகதை கற்கநிற்கத்
தப்பில்பெருங் காவியமாய் விரித்துச் செய்து
 தருவீரென் றவர்க்கு விடைகொடுத்து வேண்டுஞ்
செப்பரிய திரவியமுங் கொடுக்கவாங்கிச்
 சேக்கிழார் குரிசில் திருத்தில்லைசேர்ந்தார். 28

(இ-ள்) : இப்படியே யடைவுபடப் பிரித்துக்கேட்டால்-ஆகிய இவர்கள் சரித்திரத்தை இவ்வாறு கிரமமாகத் தனித்தனி கேட்கப் புகுங்கால்; யாவருக்குமே தரிக்கச் செவிநா நீட்ட-எல்லோருக்கும் மனதிற்றரிக்கவும் காது கொடுத்துக் கேட்கவும் நாவினாற் பிறருக்குச் சொல்லவும்; ஒப்பரிய பொருட்டெரிந்து விளங்கித்தோன்ற-ஒப்பற்ற அப்பொருளானது அவரறிவுக்குப் புலப்பட்டு விளங்கித் தோன்றவும்; உவமையுடைத்தாய கதை கற்க நிற்க-தனக்குத்தானே ஒப்பான இச்சரித்திரம் யாவரும் கற்றுணரவும் என்றைக்கும் நிலைநிற்கவும்; தப்பில் பெருங் காவியமாய் விரித்துச் செய்து தருவீரென்று அவர்க்கு விடை கொடுத்து -குற்றமற்ற பெரிய காவியரூபமாக விரிவாயியற்றிக் கொடுத்தருள் வீரென்று உத்தரவு கொடுத்து; வேண்டுஞ் செப்பரிய திரவியமுங் கொடுக்க வாங்கி-அதற்கு வேண்டிய எண்ணிறந்த திரவியமுங்

கொடுக்கப் பெற்றுக்கொண்டு; சேக்கிழார் குரிசில் திருத்தில்லை சேர்ந்தார்-சேக்கிழார் நாயனர் திருத்தில்லைக்கண் வந்து சேர்ந்தனர். (எ-று). இம்மூன்றுங் குளகம்.

தில்லையெல்லையில் வந்துவந்தெதிர் தெண்டனுக விழுந்தெழுந்
தல்லிசேர்கம லத்தடத்தினின் மூழ்கியம்பல வாணர்முன்
ஒல்லைசென்று பணிந்துகைத்தல முச்சிவைத்துள முருகிநைந்
தெல்லைகாணரி தாயபேரொளி யின்பவாரியின் மூழ்கியே. (29)

(இ-ள்) : தில்லை யெல்லையில் வந்து வந்து-சிதம்பரத்தின் திருவெல்லையைச் சேர்ந்து மகிழ்ச்சி யடைந்து; எதிர் தெண்டனுக விழுந்தெழுந்து-எதிரில் அட்டாங்க பஞ்சாங்கமாக வணங்கி எழுந்து; அல்லிசேர் கமலத் தடத்தினில் மூழ்கி-அகவிதழுள்ள தாமரை மலர் நிறைந்த சிவகங்கையில் முழுகி; அம்பலவாணர்முன் ஒல்லை சென்று பணிந்து-நடேசப்பிரான் திருமுன் விரைந்து சென்று வணங்கி; கைத்தல முச்சி வைத்து-இரண்டு கைகளையுஞ் சிரசின்மேல் வைத்துக்கொண்டு; உளமுருகி நைந்து-மனமுருகிக் கசிந்து; எல்லை காணரிதாய-அளவு காணுதற்கரிதான; பேரொளி யின்பவாரியின் மூழ்கி-பெரிய ஒளிப் பிழம்பான சிவானந்தக் கடலுள் மூழ்கி. (எ-று). ஏ-அசை.

அடையலார்புர நீறெழத்திரு நகைசெய்தன்றொரு மூவரைப்
படியின் மேலடி மைக்கொளும்பத பங்கயங்கள் பணிந்துநின்
றடிகளேயுன தடியர்சீரடி யேனுரைத்திட வடியெடுத்
திடர்கெடத்தரு வாயெனத்திரு வருளையெண்ணி யிறைஞ்
[சினர் 30.

(இ-ள்) : அடையலார் புர நீறெழத் திருநகைசெய்து-தன்னை அடையாத அசுரர்கள் திரிபுரங்கள் நீருகும்படி புன்னகை செய்து; அன்றொரு மூவரை-அந்நாளில் ஒரு மூன்றசுரரை; படியின் மேலடிமைக்கொளும் பதபங்கயங்கள் பணிந்து நின்று-நிலவுலகத்தில் அடிமை கொண்டருளும் சிவபிரான் திருவடித் தாமரைகளில் வணங்கி நின்று; அடிகளே யுனதடியர் சீரடியேனுரைத்திட-சுவாமீ உன்னடியார்கள் சிறப்பினை அடியேன் கூறுதற்கு; அடியெடுத்திடர் கெடத்தருவாயென-நூல் இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டு முதலடியெடுத்துத் தந்தருள்வாயென்று; திருவருளை யெண்ணி யிறைஞ்சினர்-சிவபிரான் திருவருளை நினைந்து வணங்கினர். (எ-று). இவ்விரண்டுங் குளகம்.

அலைபுனற்பகி ரதிநதிச்சடை யாடவாடர வாடநின்
றிலகுமன்றினி லாடுவார்திரு வருளினலச ரீரிவாக்
குலகெலாமென வடியெடுத்துரை செய்த பேரொலி யோசைமிக்
கிலகுசீரடி யார்செவிப்புலத் தெங்குமாகி நிறைந்ததால். 31.

(இ-ள்) : அலைபுனற் பகிரதி நதிச்சடையாட-அலைகின்ற நீரையுடைய கங்காநதி தங்கிய சடையாடவும்; ஆடரவாட நின்று-படம் விரித்தாடுகின்ற பாம்பணிகளாடவும் நின்று; இலகு மன்றினி லாடுவார் திருவருளினல்-விளங்காநின்ற சிற்சபையினிடத்து நடனஞ்செய்தருளுகின்ற நடேசப்பிரான் திருவருளினல்; அசரீரிவாக் குலகெலாமென வடியெடுத்துரை செய்த பேரொலி யோசைமிக்கு-அசரீரிவாக்காக உலகெலாமென முதலடியெடுத்துக் கொடுத்தருளின பேரோசையானது அதிகரித்து; இலகுசீரடியார் செவிப் புலத்தெங்குமாகி நிறைந்தது-விளக்கமான சிறப்புனையுடைய (அங்கங்கிருக்கும்) அடியார்கள் செவிப்புலமெங்கும் நிறைந்தது. (எ-று) ஆல்-அசை

(தொடரும்)



மெய்ப்பொருள் காண்பது அறிவு

அறிவை அமைக்கும் முறை-வள்ளுவர் வழியில்

டாக்டர் வித்துவான் திரு. வை. இரத்தினசபாபதி, எம்.ஏ., பி.ஓ.எல்., பிஎச் டி.,

சென்ற இதழில் தொடங்கப்பெற்ற இத்தலைப்பானது திருவள்ளுவரின்

'எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற இரண்டு குறட்பாக்களை அடிப்படையாகக் கொண்டது.

நமக்குக் கிடைக்கும் செய்திகள் எல்லாம் அறிவு ஆகா. செய்திகளை நாம் அறிவாக அமைத்தல் வேண்டும். அதற்காகத் திருவள்ளுவர் எடுத்துக்காட்டும் திருக்குறள்களே மேலே குறிப்பிடப் பெற்றவை.

இருவகைத் துய்ப்பு முறைகள் :

நேர்முகத் துய்ப்பு என்றும் செவிவழித் துய்ப்பு என்றும் இருவகைத் துய்ப்பு முறைகள் உண்டு. இவை இரண்டுமே அறிவை அமைப்பதற் குரிய செய்திகளைத் தரும் ஆற்றல் உடையவை

(1) நேர்முகத் துய்ப்பு முறையில் ஒரு அறிவுடைப் பொருள் இன்னொரு அறிவுடைப் பொருளோடு இணைந்து அனுபவம் பெறலாம். அவ்வாறன்றி, ஒரு அறிவுடைப் பொருள் அறிவு இல்லாத பொருளுடன் இணைந்து அனுபவம் பெறலாம். நட்பின் அடிப்படையில் இரு அறிவுடைப் பொருள்கள் கலந்து அனுபவம் பெறுகின்றன. நண்பர்கள் இருவர் கலந்து பெறும் அனுபவமும், ஒரு மனிதன் தான் பாராட்டி வளர்க்கும் நாயுடன் கலந்து பழகும் அனுபவமும் ஒரே வகையைச் சார்ந்தவைகளே. நாய் மனிதனை நோக்க அறிவாற் குறையுடையதாயினும் இருவரும் அறிவுடையவர்கள் என்பதை மறந்து விடலாகாது.

ஆறறிவு பெற்ற மனிதன் ஒருவன் கடல் நீரைக் குடித்து அதன் மூலம் சில அனுபவங்களைப் பெறுகிறான். இது அறிவுடைப் பொருளும் அறிவற்ற பொருளும் இணையும் இணைப்பு.

ஆறறிவு உடையவர்கள் என்று கருதப்பெறும் மனிதர்கள் அறிவதும் அனுபவிப்பதும் அறிவற்ற பொருள்களைத்தான் என்ற கருத்து ஒன்று நீண்ட நாட்களாக நிலவி வருகிறது.

இல்லற வாழ்வில் இணைந்து பன்னெடுங்காலம் வாழ்ந்த கணவனும் மனைவியும் அறிவுடை இணைப்புமுறையைச் சார்ந்தவர்களே. கணவன் மனைவியைப் பற்றி அறிந்ததாகக் கூறுகிறான்; மனைவியும் கணவனைப் பற்றி நன்கு தெரிந்தவள் தானே எனப் பறைசாற்றுகிறாள். கணவனைப் பற்றி மனைவி அறிந்தவைகளாகக் கூறும் செய்திகள் எல்லாம் அவனுடைய உடம்பைப் பற்றியன. அவனுக்குப் பசிக்கும் நேரம், கோபம் வரும் நேரம், அவனுடைய பழக்க வழக்கங்கள் முதலியவை களைப் பற்றியவைகளே. உயிர், உயிர் என இருவரும் பேசிப் பேசிப் பழகலாம். அறிவு மயமான அந்த உயிரின் உள்ளுணர்விற் கலந்து பழகிய நிலையை இருவரும் பெற்றார்கள் என்று கூற முடியுமா? எனில் இல்லை என்பதே முடிவு.

வாழ்க்கை தொடங்கிய நாளில் என் கணவரின் உயிரானது தன்னுடைய குணமாகிய அறிவு நிலையில் எத்தகைய இடத்தை வகித்துக் கொண்டிருந்தது என்று ஒரு மனைவி அறிந்த நிலையையோ, அவ்வாறே ஒரு கணவன் தன்னுடைய மனைவியைப் பற்றி அறிந்த நிலையையோ நாம் பெரும்பான்மையாகக் காண இயலவில்லை. "முன்னே எல்லாம் இவர் எடுத்ததற்கெல்லாம் கோபிப்பார். இப்போதெல்லாம் அப்படி இல்லை" என்பது போன்ற ஆய்வுரைகளைக் கூறக் கேட்பதே பெரும் பான்மை.

மேலே குறிப்பிடப்பெற்றவைகளை ஆதாரங்களாக வைத்துக்கொண்டு, அறிவுடைப் பொருள் இன்னொரு அறிவுடைப் பொருளோடும் இணைய லாம் அல்லது அறிவற்ற பொருளோடும் இணையலாம். ஆனால், அந்த இணைப்பின் மூலம் ஒரு அறிவுடைப் பொருள் இன்னொரு அறிவுடைப் பொருளைப் பற்றித் தெரிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெறுவதில்லை. அறிவுடைப் பொருள் எக்காலத்தும் அறிவற்ற பொருளைப் பற்றிய அனுபவத்தைத் தான் பெறுகிறது என்று கூறுவது ஒருசிலர் கொள்கை.

பொருள் வேறுபாடுகள் எவ்வாறு இருந்தபோதிலும் திருவள்ளுவர் முதல் திருக்குறளால் நமக்கு உணர்த்துவது பொருள்கள் இரண்டு நேர்முகத் தொடர்பு கொள்ளுகின்றன. அத்தகைய நேர்முகத் தொடர் பின் மூலம் வருகின்ற துய்ப்பு ஒன்று உண்டு என்பதே.

(2) செவிவழித் துய்ப்பு என்பது சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பால் விளைவது.

செவிவழித் துய்ப்பு என்பதை ஒத்துக்கொள்வதிலும் கருத்து வேறு பாடுகள் உண்டு.

வேதம் ஓதுகிறார்கள், திருமுறை ஓதுகிறார்கள். ஆனால், அவைகளி னால் அவர்கள் எத்தகைய அனுபவத்தையும் பெற்றதாகக் காணப்பெற வில்லை. ஆயிரக்கணக்கில், நூறாயிரக்கணக்கில் 'சிவாயநம' என்றும், 'ஸ்ரீராமஜெயம்' என்றும் எழுதியும் ஓதியும் வருகிறவர் கண்ட பயன் என்ன? என்று சமயவாதிகள் கேட்கும் கேள்வி மட்டுமா? பொருளா தாரம் படிக்கிறார்கள், பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் வாழ்க்கையில்

பொருளாதாரம் ஏற்படுத்திய அனுபவம் என்ன? அளவையியல் படிக்கிறார்கள். அவர்கள் சிந்தனையின் ஆற்றலை எவ்வாறு அது தன்னுடைய அனுபுவத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது? இத்தகைய வினாக்களை எழுப்பி, சொற்கள் நமக்கு ஏற்படுத்தும் அனுபவம் ஏதும் இல்லை என்று வாதிடுகிறார்கள்.

செவிவழித் துய்ப்பு என்பதை அறவே இல்லை என்று நீக்கிவிட முடியாது.

சீகாழியில் பொய்கைக் கரையில் ஒரு குழந்தை பாலுக்காக அழுதது என்ற சொற்களைக் கேட்டவுடன் பாண்டிநாட்டு மாதேவியாக அமைந்த மங்கையர்க்கரசியார் உள்ளத்தை உறுத்து, ஐயகோ என்று அழச் செய்து, அவர்தம் தனங்களில் பால் வடியும் நிலை ஏற்பட்டது என்பதைச் சமயவுலகம் என்றும் மறந்து விடமுடியாது. இன்னும் இது போன்ற பல சான்றுகள் காணலாம்.

திருவள்ளுவர் இங்கே குறிப்பிடுவது இருவகைத் துய்ப்பு முறைகளை மேற்கொண்டு பழகி வருகிறோம். இத்தகைய இரண்டு வழியாலும் நமக்கு அறிவு வருகின்றது என்பதே.

இருவகைத் துய்ப்பின் இயல்பு வேறுபாடு:

திருக்குறள்கள் இரண்டும் ஒரே அமைப்புடையவை என்றாலும் ஒரு அடிப்படை வேறுபாட்டை நாம் இங்கே நோக்குதல் வேண்டும்.

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”

என்ற குறளின் அமைப்பைப் போலவே முதல் திருக்குறளை நாம் இவ்வாறு அமைத்துக் காணலாம்.

“எப்பொருள் எவ்வாறு இருப்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”

என்றோ,

“எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அத்தன்மை
மெய்த்தன்மை காண்பது அறிவு”

என்றோ அமையலாம்.

மேலே குறிப்பிட்டவாறெல்லாம் திருக்குறளை விரிவுபடுத்தி ஆராய்ந்தால், திருவள்ளுவர் ஆராய்வது பண்பாராய்ச்சியா, பொருளாராய்ச்சியா, சொல்லாராய்ச்சியா, அறிவாராய்ச்சியா என்பதை நிறைவுபடுத்தி, வேற்றுமைப்படுத்திக் கண்டு விட முடியும்.

சுருங்கக் கூறின், திருவள்ளுவர் இங்கே நமக்கு முடிவாக அறிவுறுத்தும் செய்திகள் :—

(1) நேர்முகத் துய்ப்பின் மூலம் பொருளுக்கும் பண்புக்கும் உள்ள இணைப்பைத் தெரிந்து கொள்கிறோம்.

(2) செவிவழித் தொடர்பின் மூலம் பொருளுக்கும் பொருளுக்கும் உள்ள இணைப்பைத் தெரிந்து கொள்கிறோம்.

(3) இவ்விரண்டாலும் அறிவு நமக்கு வருகிறது.

(தொடரும்)

உ

வருக! இராமேஸ்வரம்

இராமேசுவரம் தீவில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில் மனம் கவரும் புராதன சிற்பக்கலைக் காட்சிகளுடனும், மிகப்பெரிய பிரகாரங்களையும் கொண்டதாக விளங்குகிறது. இராமாயண வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ள இத்தலம் பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்ருக விளங்குவதுடன், வடக்கே காசியும், தெற்கே இராமேசுவரமும் என இந்துக்களுக்குத் தலைசிறந்த இரு பெரிய புண்ணிய தலங்களாகும்.

இத் திருக்கோயிலில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. சேவார்த்திகள் வசதியாகத் தங்கவும், முறையாக வழிபடவும், இங்கு முக்கிய மாகக் கருதப்படும் இலக்குமண தீர்த்தம், தனுஷ்கோடி, கந்தமாதன பர்வதம் இடங்களுக்குப் போவதற்கு வசதியும் இக்கோயில் நிர்வாக அதிகாரியை அணுகுவதன் மூலம் அடையலாம்.

இக்கோயிலில் ஸ்ரீ இராமநாதசுவாமிக்கும், ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்பாளுக்கும் நடைபெறும் கோடி அர்ச்சனையில் சகஸ்ரநாமம் ஒன்றுக்கு ரூ. 10/– வீதம் கட்டணம் செலுத்தி அர்ச்சனை செய்து திருவருள் பிரசாதமும், வெள்ளிக் காசும் பெறலாம்.

இக்கோயிலில் நடைபெற்று வரும் மாபெரும் திருப்பணிக்குத் தாராளமாக நன்கொடை வழங்க வேணுமாய் வேண்டப்படுகிறது. இந்த நன்கொடைக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரம்,
தமிழ்நாடு.

நிர்வாக அதிகாரி
அருள்மிகு. இராமநாதசுவாமி திருக்கோயில்.

அருளும் பொருளும்

புலவர் இ. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., டிப். மானிடவியல்.,
தமிழ் விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம்.

பொருளால் உயர்வாழ்வை அடைந்த மேலை நாட்டோரும்-இன்று உணர்வால் உள்ளத்தால்-அமைதியின்றித் தவிக்கின்றனர். (விரக்தி யோடும்) வெறுப்போடும்-ஏன்-வேதனையோடும் உலகைச் சுற்றிச்சுற்றி வருகின்றனர். உள்ளத்திற்கு அமைதி கிடைக்காதா என ஏங்குகின் றனர்; வாடி வருந்துகின்றனர். வளமான வாழ்விற்கு நிலையான செல்வமிருந்தும் தடுமாறி அலைகின்றனர். செல்வமும் சிறப்பும் அவர் களுக்கு மன அமைதியைத் தரவில்லையே; ஏன்? அவர்கள் வாழ்ந்த வாழ்வு பொருள் வாழ்வு; மீண்டும் மீண்டும் வேட்கையைத் தூண்டும் பேராசை வாழ்வு. அன்பில்லாத வாழ்வு; அமைதியில்லாத வாழ்வு. எனவேதான் இந்த அவலநிலை.

அமைதி தருவது, அன்பு வாழ்வும் அருள் வாழ்வுமேயாகும். சிறிது முயன்றாலும் பொருள் வாழ்வு அமையும். பொருள் தக்கவரிடத்தும் அமையும்; தகாதவரிடத்தும் அமையும். ஆனால், அருள்வாழ்வு அங்ஙன மன்று. பண்பட்டவர்களிடத்து மட்டுமே அமையும். அன்புஈன்ற பண் பட்ட குழந்தையே அருள். ஒருவருக்கு அருள்வாழ்வு அமைவது அருமையிலும் அருமை. அருள் வாழ்வை விரும்பின் பிறர் பொருளை விரும்பும் பொருள் வாழ்வைத் துறத்தல் வேண்டும்.

மானிட வாழ்க்கையோ அருள்நலத்தால் சிறக்க வேண்டிய ஒன்று. பிறரிடத்து யாதொரு குறிக்கோளுமின்றிக் காட்டப்படுவது அருள் ஆகும். அருளை விழைந்தவர்கள் அன்பு நெறியில் நின்றவர்கள்-வென்றவர்கள்; அறநெறியிற் சென்றவர்கள்; வாழும் நெறியினை உணர்ந்த வழிகாட்டுவோர்கள். இவர்கள் இறைவனிடத்து வேண்டும் போதும்,

"யாமிரப்பவை
பொன்னும் பொருளும் போகமுமல்ல
அருளும் அன்பும் அறனும் மூன்றும்"

என நினைந்து நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து வேண்டும் உள்ளத் திண்மையினர். மெய்த்திரு வந்துற்றாலும், வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கும் உள்ளத்து உரம் பெற்றவர்கள்.

'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்'

என்பது சேக்கிழாரின் தெய்வத் தமிழ்த் திருவாக்கு.

தேனிலும், உப்பிலும் ஊறிய பொருள்கள் அவ்வச்சுவையையே பெற்றுத் தந்து விளங்குவதுபோல அருட்சுவையிலே திளைத்த அருளாளர் பொருட்சுவையினை விரும்பார். பிறர் பொருளின்மேல் விருப்பு வைப்பாராஞல், விருப்பு வெறுப்பற்ற இறைவனின் உள்ளத்தை எங்ஙனம் அடையமுடியும்?

"பொருள்-அருள்" என்னும் இரண்டனுள் அருளே சிறந்தது என்று நம்பித் தெளிந்தவர்கள்-அதையே விரும்பி அதற்குரிய நெறியில் நின்றவர்கள்-பின்னர்ப் பிறர் பொருளை விரும்பி அலைதல்-மனந்திரிதல் கூடாது. தாமும் திருந்தி, உலகத்தையும் திருத்தவல்ல அறிவாளிகளுக்கும், அருளாளர்களுக்கும் இதனை வலியுறுத்திக் கூறுகின்ருர், வள்ளுவர். அருளை நாடியவர்களும், அறிவை நாடியவர்களுமே பிறருடைய பொருள்களுக்காக அலைவார்களாஞல் மற்றவருடைய நிலையை என்னென்றுரைப்பது?

எனவே உலகை உய்விக்கவந்த அருளாளர் ஒருபோதும் பிறர் பொருளை விரும்பார். விரும்பின், அவர்தம் அன்பு-பொய்யன்பே; வாழ்வு-பொய் வாழ்வே; அருள் எனக்காட்டி வஞ்சிக்கும் அவருடைய வாழ்வு பிறரை அழிக்கும் வாழ்வே. பிறர்க்கு உதவுவோரே அருளாளர்-பிறர் பொருளை விரும்புவோர் அருளாளராக மாட்டார்கள். எனவே தான் வள்ளுவர்,

அருள்வெஃகி ஆற்றின்கண் நின்ருன் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்

என அறிவுறுத்துகின்ருர்.

ஒழுக்க நெறியினை உலகிற்குணர்த்தும் அருளாளர்களும், முழுதும் கற்றுத் துறைபோகிய அறிவுடைப் பெருமக்களுங்கூடப், பிறர் பொருளை விரும்புதல்கூடும் என உலகியலுணர்ந்து கூறிய வள்ளுவரின் அமுத மொழி வாழ்விக்கும் திருமொழியேயாம். வள்ளுவர்தம் நெறிநின்று வையத்தையும் வாழ்வையும் செம்மையாக்குவோம்.



காரைக்காலம்மையார்

பழ-தரும-ஆறுமுகம்

சென்ற இதழ் 276ஆம் பக்கத் தொடர்ச்சி

அதைக்கேட்ட சுற்றத்தாரும் "இது என்ன அதிசயம்" என்று வியந்து நின்றார்கள். தன் கணவனாகிய பரமதத்தனிடத்தில் மாற்றத்தைக் கண்ட புனிதவதியாரும் சிவபெருமான் திருவடியைச் சிந்தை செய்து ஒன்றிய நோக்கத்தில் மிக்க உணர்வு கொண்டு, "இறைவா! என் கணவனுடைய கொள்கை இதுவானால், இத்துணை நாட்களாகக் கணவனாகிய பரமதத்தனுக்காக என்று பாதுகாத்து வந்த என் உடலழகை யெல்லாம் நீக்கி, உன்னுடைய திருவடிகளைப் போற்றும் பேய் வடிவை அடிமையாகிய எனக்கு அருளிச் செய்யவேண்டும்" என்று பரவி நின்றார். அக்கணத்திலேயே, கூத்தபிரான் திருவருளினாலே, புனிதவதியாரின் அழகெல்லாம் மறைந்து, வானமும் மண்ணும் எல்லாம் வணங்கும் பேய்வடிவு பெற்றார். அப்போது தேவர்கள் மலர்மாரி பெய்தார்கள்; வான துந்துபியின் நாதம் உலகெலாம் நிறைந்து விம்மிற்று; உடனிருந்த சுற்றத்தவரும் புனிதவதியாரைத் தொழுது, அச்சம் மிகக் கொண்டு அகன்றனர்.

புனிதவதியார் சிவபெருமான் திருவருளினாலே கிடைத்த ஞானத்தைக் கொண்டு, "பொற்புடைச் செய்யபாத புண்டரீகங்கள் போற்றும் நற்கணத்தில் ஒன்றானேன் நான்" என்று நயந்து பாடி, அற்புதத் திருவந்தாதியையும் திருவிரட்டை மணிமாலையையும் அருளிச் செய்தார்.

திருக்கைலை மலையைச் சேரும் பெருவிருப்புடன் உணர்வு பொங்க, வடதிசைத் தேசம் எல்லாம் மனதினும் கடிது சென்று, கைலைமலையை அடைந்தார். எம்பெருமான் உறைகின்ற இம்மலை மீது காலால் நடத்தல் முறையன்று என எண்ணி, தலையினால் நடந்து சென்றார்.

தலையினால் நடந்து சென்று சங்கரன் இருந்த வெள்ளிமலையின் மேல் மகிழ்ச்சியால் அன்பு பொங்க ஏறும்போது இமயவல்லியாகிய பார்வதியின்

திருக்கண் நோக்கம் உற்றது. அம்பிகை திருவுள்ளத்தில் வியப்புற்று, தாழ்ந்து, சிவபெருமானை நோக்கித் "தலையினால் நடந்து இங்கு ஏறிவரு கின்ற, எலும்பாலான உடம்பை உடைய இவரது அன்பின் திறம் என்ன?" என்று கேட்டார். உடனே சிவபெருமான் "உமையே வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண்! இந்தப் பெருமை பொருந்திய பேய் வடிவத்தை நம்மிடம் வேண்டிப் பெற்றனள்!" என்று சொன்னார்.

புனிதவதியார் அருகில் வந்தவுடன் அவரை நோக்கிச் சிவபெருமான், "அம்மையே!" என அழைத்தார். அதைக் கேட்ட புனிதவதியார், "அப்பா!" என்று சொல்லிக் கொண்டு அவருடைய திருவடிகளிலே விழுந்து வணங்கினார்.

சிவபெருமான் அவரை நோக்கி, "உனக்கு வேண்டும் வரம் யாது?" என்று வினவினார். புனிதவதியார் வணங்கி நின்று இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார். "பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும். அறவா, நீ ஆடும்போது, உன் திருவடியின் கீழ் நான் மகிழ்ந்து பாடி உன் திருவடியின் கீழ் இருக்க அருள்புரிய வேண்டும்" என வேண்டினார். அவர் கேட்ட வரத்தை அளித்த சிவபெருமான் "குல தென்திசையில் திருஆலங்காடு என்னும் திருத்தலத்தில், நாம் ஆடுகின்ற மாநடங் கண்டு மகிழ்வோடு, நம்மை எப்போதும் பாடுவாயாக!" என்று அருளினார்.

இவ்வாறாக வரம் பெற்ற அம்மையும் சிவபெருமானிடம் விடை பெற்றுக்கொண்டு, தலையினாலேயே நடந்து வந்து திருவாலங்காட்டைச் சேர்ந்தார். ஆலங்காட்டில் எம்பெருமானின் அண்டமுற நிமிர்ந்து ஆடுகின்ற கோலம் கண்ட பொழுது "கொங்கைதிரங்கி" என்றெடுத்து மூத்த திருப்பதிகமும் மற்றும் பல பதிகங்களும் பாடியருளினார்.

சிவபெருமானாலேயே "அம்மை" என மதுரமொழி கொடுத்தாளப் பெற்றவரும் எம்பெருமான் ஆடும் ஆனந்த தாண்டவத்தில் அவர் எடுத்தருளும் சேவடியின்கீழ் என்றும் இருக்கின்ற வரும் ஆகிய காரைக்காலம்மையாரின் பெருஞ்சிறப்பை அளவிட்டுரைக்க இயலுமோ?

ஆதியோடு அந்தம் இல்லானாகிய சிவபெருமான் அருள்நடம் ஆடும் போது, அப்பெருமானின் திருவடியின் கீழ் இருந்து பாடிக்கொண்டிருக் கின்ற காரைக்கால் அம்மையாரின் திருவடிகளை வணங்கி வாழ்வாம்.

—:o:—

சமயபோதனை

பாடம் 2 விஞக்கள் ஏப்ரல் 1974.

விஞக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவே ஆகும். விடைகளை முழு அளவு (Foolscape size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கத்திற்குள் எழுதி இச்செயலகத்திற்கு 30-4-1974க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

மதிப்பெண் சமம்] [மதிப்பெண் 100

1. நம் அறிவாற்றல் திறனை வெளிப்படுத்துவது யாது?
2. இருவகைத் துய்ப்பு முறைகளை விளக்குக.
3. வாழ்வில் எங்ஙனம் அமைதி பெறலாம்?
4. அருளாளர்களின் தன்மையை விளக்குக,
5. சிவபெருமானிடம் புனிதவதியார் என்ன வரம் கேட்டார்?
6. வைகாசித் திங்கள் பற்றிக் கல்வெட்டுக்கள் கூறும் செய்திகள் என்னென்ன?
7. கடவுள் நம்பிக்கை உடையவர்களை அறங்காவலர்களாக நியமிக்க வேண்டியதன் அவசியம் என்ன?
8. பெரிய புராணம் இயற்றிய வரலாற்றைச் சேக்கிழார் அநபாயச் சோழனிடம் எவ்வாறு கூறுகிறார்?
9. இராமாநுசர் திருவாய்மொழி கற்ற வரலாற்றைச் சுருக்கமாக எழுதுக.
10. "அறிஞரே, நீர் தோற்கவில்லை! உம்மிடமிருந்த நான் என்ற ஆணவமே தோற்றது"—யார், யாரிடம், எப்போது கூறியது?

விடைகளை எழுதி உரிய அஞ்சல்தலை யொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும் :—

"அருளோசை"

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை,
ஆழ்வார்பேட்டை,
சென்னை-600018.

உ

திருநீற்றீசுவரர் திருக்கோயில்
புதிய கும்மிடிபூண்டி
செங்கை மாவட்டம்

—:o:—

சென்னை சமரச சுத்த சன்மார்க்க சித்தர்கள் மடம் சார்பில்

சித்திரைப் பௌர்ணமி பெருவிழா (5-5-74)

காலை 6 மணி : 1008 அருட்பாவிற்கு 1008 அகல் விளக்கேற்றம்

இரவு 9 மணி : 'இசைச் செல்வன்' சிதம்பரம் S. மீனாட்சி சுந்தரம் குழுவினர் இன்னிசை

இரவு 1 மணி : ஜோதி தரிசனம்.

அனைவரும் வருக!

சாதுகுரு திருஞான சம்பந்த சாமிகள்
தலைவர்

---

* எங்களது பெனிபிட் திட்டத்தில் சேர்ந்து பலரும் பயனடைந்து வருகின்றனர்; நீங்களும் சேர்ந்து பல்லாயிரக்கணக்கில் பணம் பெறலாம்.

* திருப்பணிகளுக்கு நிதி திரட்டுவோர் எங்கள் திட்டத்தின் மூலம் சுலபமாக நிறைய நிதி திரட்டலாம்.

விபரங்களுக்கு :

மேலாளர்,
மியூசுவல் பெனிபிட் பைனான்ஸ் கம்பெனி (பதிவு)
43-G, ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை-600015

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தசகாரியம்

சிவாயநம

சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

242ஆம் பக்கத் தொடர்ச்சி

"மெய்மைச் சிவயோகமே யோகம் அல்லாத யோகம் அவயோக மென்றேயறி" என்று திருக்களிற்றுப்படியாரில் (74) உளது. அச் சிவயோகமேயன்றி ஏனைய யோகமெல்லாம் அவயோகம் என்றற்கு ஏதுவும் அதிற் சொல்லப்பட்டது. "அம்மையிலும் இம்மையிலும் அச்சம் தவிர்த்து அடியார் எம்மையுமாய் எங்கும் இயங்குதலான்" என்ற ஏது முன்னீரடியில் இருக்கின்றது. அடியார்க்கு இம்மையும் அம்மையும் இல்லை. அவற்றின்கண் அச்சமும் இல்லை. பிறப் பிறப்பின்றி எம்மையுமாய் எங்கும் இயங்கும் முடிவாயவொரு நிலை யெய்தியதே ஏதுவாகும். இதுதான் பரமமுத்திநிலை. இதைக் கொடுக்கும் அச் சிவயோகத்தினும் வேருக யோகம் ஒன்று சிறந்ததில்லை. இச் சிவதரிசனம் சிவ யோகம் என்னும் இரண்டும் நிகழ்கின்ற காலத்தில்தான் ஆன்ம சுத்தியும் உண்டாகின்றது. ஆகவே, அம்மூன்றும் ஒருங்கு நிகழும் காரியம் அது. தசகாரியம் முற் கூறியவாறு ஏழாக அடங்கி நிற்கும். சிவரூபமும் ஆன்ம தரிசனமும் இயையும். அப் பத்துள் இம்மூன்றும் (சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம்) ஆன்ம தரிசனத்திலும் ஆன்ம சுத்தியிலும் அடங்குதலால் ஏழாயின. முடிவாக நின்ற சிவபோகம் ஆன்பலாபமாகும். இதுவே பேரின்பநிலை. இரவு பகலில்லா இன்பவெளி. ஒழிவற நிறைந்து அசைவற நிற்கும் பரமசிவ நிலை. சாயுச்சிய முத்திநிலை ஆன்மாவிற்கு இஃது அன்றி வேறு இல்லை. ஆன்மா எல்லாவற்றையும் மறந்து, தற்பரத்தோடு ஒரு நீர்மையாய் விடும் நிலை இதுவே.

"பொருளும் மனையும் அறமறந்து போகம் மறந்து புலன் மறந்து
கருவி கரணமவைமறந்து காலமறந்து கலைமறந்து
தருமமறந்து தவமறந்து தம்மைமறந்து தற்பரந்தோ
டுருகியுருகி யொருநீர்மையாயே விட்டார் உய்யவந்தார்"

என்ற பழம் பாடலை இங்கு எண்ணுக.

திருவாசகத்திலே,

"கயன்மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக் கலந்தாண்டலுமே
அயன் மாண்டருவினைச் சுற்றமுமாண் டவனியின்மேல்
மயன்மாண்டு மற்றுள்ள வாசகமாண்டென்னுடைய
செயன் மாண்டவா பாடித் தெள்ளேணங்கொட்டாமோ !

வான்கெட்டு மருதம் மாய்ந்தழல் நீர் மண்கெடினும்
தான் கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூள்கெட் டுயிர்கெட்டுணர்வு கெட்டெனுள்ளமும் போய்
நான் கெட்டவா பாடித் தெள்ளேணங் கொட்டாமோ?

'உண்மை நெறி' என்பது தசகாரியத்தை விளக்கும் ஆறு திரு விருத்தம் உள்ள உண்மை ஞானசாத்திரம். அதன் முடிவில் "பெருகு சிவபோகம் எனப் பேசும் நெறி இதுவே" என்றுளது. அதனை "உண்மை நெறிசங்கற்பம் உற்று" என்று நூற்பெயர் உணர்த்தும் வெண்பா அறிவிக்கின்றது. துகளறு போதப் பொருளை உண்மை நெறிப்பொரு ளோடு இயைத்து அடக்கிக் காட்டும் உரையே உண்மை நெறிவிளக்கம் எனப்படுவது. மூலத்தை நெறி என்றும் உரையை அந்நெறியின் விளக்கம் என்றும் உணர்வதே தகும்.

"எண்ணும் அருணூல் எளிதின் அறிவாருக்கு +
உண்மை நெறி விளக்கம் ஓதினன்-வண்ணமிலாத்
தண்காழித் தத்துவனூர் தாளே புனைந்தருளும்
நண்பாய தத்துவநா தன்"

என்னும் வெண்பாவின் உண்மைப் பொருள் இதுவே. இதைக் கொண்டு, உண்மை நெறியை அருளிய உமாபதி தேவரையும் உண்மை நெறி விளக்கம் எழுதிய தத்துவநாதரையும் உணர்தல் நன்று. விளக்கம் எழுதியவரே நெறியையும் எழுதினர் எனக் கொள்வது மகாரச் சார்பின் விளைவே.

மாயைநட்போரையும் மாயா மலம் எனும்மாதரையும்
வீயவிட்டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்று பின் தாதையைக் கூடிப் பின் தாயை மறந்
தேயுமதே நிட்டை னென்ரு னெழிற் கச்சியேகம்பனே"

என்னுந் திருப்பாடல் இத்தசகாரியவுண்மையை உணர்த்துவதே.

யகாரத்திற்கு நகாரம் (நட்பு) (நண்பன்)
,, மகாரம் (மனைவி) (பலரைப் புணர் இருட்பாவை)
,, வகாரம் (தாய்) (மெய்யருள்)
,, சிகாரம் (தாதை)

வீயவிடுதல் மும்மலத்தின் நீங்கல்
வெளியே புறப்படல்-அருள் வெளி நடை நிகழ்ச்சி
மெய்யருளாந்தாய்-வா (திருவருள்)
தாயுடன் செல்லல்-அவனருளாலே அவன் தாள் வணங்கல்
(ஞானியர் வழிபாடு)

தாயை மறத்தல்-மிகு பஞ்சாக்கரத்தால் இயலும் ஆடலைப்பேணுதற்கு முற்பட்ட அவதரம். ஞாதுரு ஞானம் ஞேயம் நழுவாது நழுவி நின்ற நிலை.

ஏயுமது-மிகுபஞ்சாக்கரமெய்ப் பொருளாய் நிட்டை கூடிப் பேரின்பம் துய்த்து, அத்துய்ப்பையும் கடத்தல். (ஞேயமாத்திரமாய் நின்றநிலை) நிட்டை-யகாரம் சிகாரமேயாய், சிகாரமானேம் என்பதையும் மறந்து சிகாரம் ஆகிய ஞேயமாத்திரமாய் உறுதியாய் நிற்கும் பரம சுக நிலை.

தசகாரியம் உண்மை ஞானத்தின் நிகழ்ச்சி, சுத்தாவத்தையில் ஞானிகள் மேற்கொள்ளும் ஞானப்பியாசம், ஞானசாரம். 'சிவஞானச் செயலுடையோர் சிவஞானச் செய்தியுடையோர்' என்றுணர்த்தியதால் இவ்வுண்மை புலப்படும். அப் பத்துச் செயலுள் முதல் நான்கும் நிகழ்ந்த முடிவில் நின்மலசாக்கிரம். ஆன்மதரிசனமும் சிவரூபமும் நின்மலசொப்பனத்தில் இதில் ஆன்மா சிவனெடு அத்துவிதமாய்க் கண்ணும் கதிரவனும் போலிருப்பது. இஃது எட்டாவது சூத்திரப் பொருளின் எய்தும் நிலை. சிவரூபம் என்பது சிவனுடைய இச்சா ஞானக்கிரியா சொரூபம்.

நின்மலசுழுத்தியில் ஆன்மா சிவனேடு ஒப்ப முற்றறிவும் ஐந்தொழிலும் உடையேன் என்று உணர்ந்த மயக்கம் ஒன்றே உண்டு, அதனல் நின்மல சுழுத்தியவத்தை. இதற்குச் சூத்திரம் இல்லை. தசகாரியத்துள் அடங்கும் ஞானச் செய்தியும் இல்லை.

நின்மலதுரியத்தில் சிவதரிசனம் சிவயோகம் ஆன்மசுத்தி மூன்றும் நிற்கும். இதில் ஆன்மா உடலும் சிவம் உயிரும் போலும், அவன் உயிர் அவனருள் உடல்.

நின்மலதுரியாதீதத்தில் சிவபோகம் (ஆன்மலாபம்) ஒன்றே.

இதில் ஆன்மாவும் ஆன்மஞானமும்போல இரண்டறக்கலந்து ஒன்ருய் நின்று பிராரத்துவ போகத்தைச் சிவபோகமாய் விளைவித்து நிற்பன்.

"தத்துவரூபமுடன் தற்காட்சி சுத்தி உயிர்
ஒத்த உருவம் உயர்காட்சி-சுத்தி
இலாபம் இவை எழில் இயங்கும் உயிர்க்காட்சி
நிலாவு சிவரூபம் நேராம்-குலாவுசுத்தி
தன்னிற் றரிசனமும் சார்யோகம் ஆம் இரண்டும்
மன்னும் இவை ஏழும் வரு முறையில்-துன்னுகின்ற
சாக்கிரத்தில் நான்கு தகுஞ்சொப் பனம் ஒன்று
நீக்குஞ் சுழுத்தி நிறை துரியத்-தாக்கியிடும்
ஒன்ரும். அதீதத்தே உற்றிடும் ஒன்ருகும்."

பஞ்சாக்கரப்பஃறெடை

"தன்னைத் தலைவன் எனக்கருதல் தலைமை அருளே எனக் கருதல்
பின்னர்ப் புதிதாய் அருட்செயலைப் பெறவே யெண்ணி அது நீக்கி
மன்னித் திருவரு ளாய்ப் போதல் மகிழும் பரசிவனைச் சார்தல்
துன்னிக்கருதும் அவத்தையெனச் சொல்லும் சுருதி சிவாகமமே,

(சுவாமி-தசகாரியம்)

உண்மை நெறி

தசகாரியம்

தத்துவரூபம் தத்துவதரிசனம் தத்துவசுத்தி

மண்முதற் சிவமதீரு வடிவுகாண் பதுவே ரூபம்
மண்முதற் சிவமதீரும் மலம் சடம் என்றல் காட்சி
மண்முதற் சிவமதீரும் வகையினில் தான்நிலாது
கண்ணுத லருளால் நீங்கல் சுத்தியாக் கருதுமன்றே.

ஆன்மரூபம், தரிசனம், சுத்தி

பாயிருள் நீங்கி ஞானந்
தனைக்காண்டல் ஆன்மரூபம்
நீயும்நின் செயலொன் றின்றி
நிற்றலே தெரிச னந்தான்
போய் இவன் தன்மை கெட்டுப்
பொருளிற்போய் அங்குத் தோன்ரு
தாய்விடில் ஆன்ம சுத்தி
அருள் நூலின் விதித்த வாறே.

சிவரூபம்

எவ்வடி வுகளும் தானும் எழிற்பரை வடிவதாகிக்
கவ்விய மலத்தான் மாவைக் கருதியே ஒடுக்கி ஆக்கிப்
பவ்வம்விண் டலகப் பண்ணிப் பாரிப்பான் ஒருவ னென்றே
செவ்வையே உயிருட் காண்டல் சிவரூபமாகு மன்றே.

சிவதரிசனம்

பரை உயிரில் யானெனதென் றறநின்ற தடியாம்
பார்ப்பிடமெங் குஞ்சிவமாய்த் தோன்றலது முகமாம்
உரையிறந்த சுகமதுவே முடியாகும் என்றங்
குண்மையினை மிகத்தெளிந்து பொருள் வேருென்றின்றித்
தரை முதலிற் போகாது தன் நிலை நில்லாது
தற்பரையில் நின்றழுந்தா தற்புதத்தி னுகுத்
தெரிவரிய பரமானந் தத்திற் சேர்தவ்
சிவனுண்மைத் தெரிசனமாச் செப்பும் நூலே.

சிவயோகம்

எப்பொருள்வந் துற்றிடினும் அப்பொருளைப் பார்த்திங்
கெய்துமுயிர் தனைக்கண்டிவ் வுயிர்க்கு மேலாம்
ஒப்பில் அருள் கண்டு சிவந் துண்மை கண்டு
உற்றதெல்லாம் அதனுலே பற்றி நோக்கித்
தப்பினைச் செய்வதும் அதுவே நினைப்பும் அது தானே
தரும் உணர்வும் புசிப்பும் அதுதானே யாகும்
எப்பொருளும் அசைவில்லை யென அந்தப் பொருளோ
டியைவதுவே சிவயோகம் எனும் இறைவன் மொழியே

சிவபோகம்

பாதகங்கள் செய்திடினும் கொலைகளவு கள்ளுப்
பயின்றிடினும் நெறியல்லா நெறிபயிற்றி வரினும்
சாதி நெறி தப்பிடினும் தவறுகள் வந்திடினும்
தனக்கென ஓர் செயலற்றுத் தான் அதுவாய் நிற்கில்
நாதன் இவன் உடல்உயிராய் உண்டுறங்கி நடந்து
நானுபோ கங்களையுந் தானுகச் செய்து
பேதமல நின்றிவனைத் தானுக்கி விடுவன்
பெருகு சிவ போகமெனப் பேசு நெறியிதுவே.

கல்வெட்டுக்களில் வைகாசித் திங்கள்

ஸ்ரீரங்கம். கே. ஸ்ரீதரன், எம்.ஏ.,

—: o :—

தமிழ்ப்புத்தாண்டு மாதமான சித்திரை மாதத்திற்குப் பிறகு வருவது வைகாசி மாதம். இம்மாதம் முதுவேனில் காலமாகும். வைகாசி மாதத்தில் வரும் நிறைமதிநாள் வைகாசி விசாகம். தமிழ்த் தெய்வமான முருகன் உதித்த நாளும் வைகாசி விசாக நன்னாள் ஆகும். முருகனுக்கு விசாகன் என்ற பெயரும் உண்டு. இம்மாதத்தில் வெம்மையின் காரணத்தால் மக்கள் செல்லும் சாலைகளில் தண்ணீர்ப் பந்தர்கள் வைப்பார்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த வைகாசித் திருவிழாவைக் கோயில்களில் சிறப்பாகக் கொண்டாட நாட்டை ஆண்ட மன்னர்கள் தானமளித்து கல்வெட்டுக்களில் பொறிக்கச் செய்தனர். அக் கல்வெட்டுக்கள் கூறும் செய்திகளை இனி நோக்குவோம்.

தஞ்சைக்கோயிலில் வைகாசித் திருவிழா சிறப்பாக ஒன்பது நாட்கள் நடத்த முதலாம் இராசேந்திரன் தானமளித்தான். அவ்விழாவின் போது 'இராசராசேசுவரம்' என்ற நாடகம் நடத்தப்பெற்றது. இதில் நடித்தவன் சாந்திக் கூத்தன் திருமுதுகுன்றனை விசயராசேந்திர ஆசாரியன் என்பவன் ஆவான். மேலும் இவ்விழாவின்போது வரும் சிவயோகிகளுக்கு உணவு வழங்கப்பெற்றது. திருநெய்த்தானம் கோயிலில் வைகாசி விசாகத் திருவிழா நடத்த ஏற்பாடு செய்த செய்தியை முதலாம் பரகேசரியின் கல்வெட்டுக் கூறுகின்றது.

கோனேரிராசபுரம் கோயிலில் வைகாசித் திருவிழாவின்போது வரும் அந்தணர்களுக்கும் ஏனைய அடியார்களுக்கும் உணவு அளிக்கத் தானம் அளிக்கப் பெற்றதாக உத்தமசோழன் கல்வெட்டுக் கூறுகின்றது. காமரசவல்லி கோயிலில் வைகாசித் திருவாதிரை மற்றும் மார்கழித் திருவாதிரை விழாக்களில் இறைவன் முன்பு சாக்கை கூத்து நடத்த முதலாம் இராசேந்திர சோழன் தானமளித்தான் (1914-இல் 65).

ஆகவே, இத்தகைய சிறப்பு வாய்ந்த வைகாசி விசாக நன்னாளில் தமிழ்த் தெய்வமான முருகனைப் போற்றி வழிபடுவோம்,